ISSN 2454-3993

■ மலர் 3 ■ சிறப்பிதழ் 2 ■ பிப்ரவரி, 2019

JOURNAL WITH 3.085 IMPACT FACTOR SIJ TAMIL STUDIES

SHANLAX #SINCE1990

# சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

**மெடோனா பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி**
விரகனூர், மதுரை

**சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்**
மதுரை

இணைந்து நடத்தும்

**தொகுதி – 1**

**பன்னாட்டுக் கருத்தரங்கம்**




08.02.2019

**பதிப்பாசிரியர்கள்**

திருமதி. சே.சலோமி இராஜரீகம்
அருள்சகோதரி முனைவர் திரவிய ரெஜினா ராஜம்
முனைவர் அ.செபாஸ்டின் மகிமைராஜ்
முனைவர் சி.அருள் மைக்கேல் செல்வி
முனைவர் இரா.ஏஞ்சல்
முனைவர் கோ.கருணாகரன்
முனைவர் செ.அன்புராணி
திருமதி. ஜோ.சகாய பவுலின்

**UGC Approved Journal Number: 40729**
**VOLUME 3 | SPECIAL ISSUE 2 | FEBRUARY 2019**
**Shanlax International Journal of Tamil Studies**
A Peer-Reviewed-Refereed Scholarly Quarterly Journal Globally Indexed with Impact Factor

ISSN INTERNATIONAL STANDARD SERIAL NUMBER INTERNATIONAL CENTRE
PKP PUBLIC KNOWLEDGE PROJECT
OJS OPEN JOURNAL SYSTEMS
SHANLAX INTERNATIONAL JOURNALS
editorsij@shanlaxjournals.in | www.shanlaxjournals.in

Dr. S. ARUL MICHEAL SELVI
08.02.2019

SHANLAX
#SINCE1990

# SHANLAX
INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES
editorsij@shanlaxjournals.in | www.shanlaxjournals.in

மலர். 3 சிறப்பிதழ் 2 பிப்ரவரி, 2019 Impact Factor: 3.085

ISSN: 2454-3993 UGC Approved Journal Number: 40729

மெடோனா பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
விரகனூர், மதுரை - 625 009.

SHANLAX
#SINCE1990

சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

இணைந்து நடத்தும்

பன்னாட்டுக் கருத்தரங்கம்

# சமுதாயத்தில் பெண்களின் பன்முகத்தன்மைகளும் மேம்பாடுகளும்

8 பிப்ரவரி 2019

தொகுதி 1

## பதிப்பாசிரியர்கள்

திருமதி.சே.சலோமி இராஜஸ்ரீகம்
முனைவர் சி.அருள் மைக்கேல் செல்வி
முனைவர் அ.செபாஸ்டின் மகிமை ராஜ்
முனைவர் இரா.ஏஞ்சல்
முனைவர் கோ.கருணாகரன்
முனைவர் செ.அன்புராணி
திருமதி ஜோ.சகாய பவுலின்

# பொருளடக்கம்



| வரிசை எண். | தலைப்பு | பக்கம் எண். |
|---|---|---|
| 1 | மாதவி - ஒரு மறுவாசிப்பு<br>**முனைவர் அலெக்சிசு தேவராசு சேன்மார்க்** | 1 |
| 2 | பாரதி பார்வையில் பெண்ணியம்<br>**உ.சாராணி சாமிநாதன்** | 5 |
| 3 | மலேசியத்தமிழ் இலக்கியத்தில் பெண் படைப்பாளிகள்<br>**முனைவர் மனோன்மணி தேவி அண்ணாமலை மற்றும்**<br>**முனைவர் சரவணன் வீரமுத்து** | 9 |
| 4 | மலேசியப் பெண்களின் கல்வி முறைகள்<br>**மலர்விழி சின்னையா** | 13 |
| 5 | மலேசியச் சிறுகதைகளில் பெண் அடக்குமுறை<br>**முனைவர் தனலட்சுமி பெருமாள்** | 16 |
| 6 | "மலேசியத் தமிழ்ச் சிறுகதைத் துறையில் பெண் படைப்பாளிகள்"<br>**முனைவர் சரசுவதி உலகன் மற்றும்**<br>**முனைவர் மனோன்மணி தேவி அண்ணாமலை** | 19 |
| 7 | ஊடகத்தில் சாதனை மகளிர்<br>**ப.பண்பு செல்வன்** | 23 |
| 8 | 'திருவிவிலியத்தில் யூதித்தும் - யூத மக்களின் விடுதலையும்'<br>**தா.ஆரோக்கிய தாஸ்** | 26 |
| 9 | குறள் காட்டும் மனையாள் ஆளுமை<br>**சி.எலிசபெத்ராணி** | 30 |
| 10 | தமிழ் இலக்கியங்களில் அரசியலும் பெண்களும்<br>**முனைவர் செ.அன்புராணி** | 34 |
| 11 | அம்மியில் அரைக்கப்பட்டவை<br>**முனைவர் இரா.ஏஞ்சல்** | 38 |
| 12 | 'அந்திமகாலம் புதினத்தில் பெண்களும் அநீதியும்'<br>**முனைவர் சரவணன் வீரமுத்து மற்றும்**<br>**முனைவர் மனோன்மணி தேவி அண்ணாமலை** | 42 |
| 13 | பல்துறையில் மகுடம் சூடிய மங்கைகள்<br>**ப.அர்ச்சனா மற்றும் திருமதி. சுனிதா ஈவ்லின் கிறிஸ்டி** | 51 |
| 14 | அகநானூற்றுப் பெண்பால் புலவர்களின் பாடல்களில் இடம்பெற்றுள்ள பதிவுகள்<br>**முனைவர் சி.அருள் மைக்கேல் செல்வி** | 54 |
| 15 | பக்தி இலக்கியங்களில் பெண் இசைக்கலைஞர்கள்<br>**முனைவர் இரா.சந்திரா** | 60 |

# அகநானூற்றுப் பெண்பால் புலவர்களின் பாடல்களில் இடம்பெற்றுள்ள பதிவுகள்

**முனைவர் சி. அருள் மைக்கேல் செல்வி**
உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்
பாத்திமா கல்லூரி (தன்னாட்சி), மதுரை

**மலர்:** 3

**சிறப்பிதழ்:** 2

**மாதம்:** பிப்ரவரி

**வருடம்:** 2019

**ISSN:** 2454-3993

## முன்னுரை

செவ்வியல் தகுதி பெற்ற நாற்பத்தொரு நூல்களுள் 'பாட்டும் தொகையும்' ஆகிய பதினெட்டு நூல்கள் தனிச்சிறப்புப் பெற்றவை. 'என்றும் உள தென் தமிழின்' சிறப்புக்களைப் பார் எங்கும் பறைசாற்றும் பதினெண்மேற்கணக்காகிய சங்க இலக்கியங்கள் தமிழரின் நாகரிகம், பண்பாடு, வாழ்வியல் போன்ற அரிய செய்திகளை அறியத் துணை செய்யும் வரலாற்றுக் களஞ்சியங்கள் ஆகும். தனிப்பாடல்களாகவும் தொகைப் பாடல்களாகவும் அமைந்துள்ள இச் சங்க இலக்கியத்தைப் பாடிய புலவர்கள் 473 பேர் என்பர். இவர்களுள் 35 பேர் பெண்பால் புலவர்கள் ஆவர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க காலத்தில் பெண்கள் கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கினார்கள் என்பதற்கு இப்புலவர்களே சிறந்த சான்றாவர். (முனைவர் நிர்மலா மோகன், சங்கச் சான்றோர் ஆளுமைத்திறன், ப. 87.) இப்புலவர்களுள் அகநானூற்றில் இடம்பெற்றுள்ள பாடல்களைப் பாடியுள்ள பெண்பால் புலவர்களின் பாடல்கள் மட்டும் ஆய்வுப் பொருண்மைக்கு உரிய தரவாக எடுத்துக்கொள்ளப்படுகின்றது.

## அகநானூறு

அகப்பொருள் குறித்த நானூறு பாடல்களைக் கொண்டுள்ள நூல். கடவுள் வாழ்த்துடன் நானூற்றொரு பாடல்கள் இடம்பெற்றுள்ளன. உருத்திர சன்மரால் தொகுக்கப்பட்ட இந்நூலைத் தொகுப்பித்தவன் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி ஆவான். களிற்றியானை நிரை, மணிமிடை பவளம், நித்திலக் கோவை என்ற மூன்று பகுதியாக அமைந்துள்ள இந்நூலின் பாடல்களைப் பாடியுள்ள புலவர்கள் 145 பேர் என்பர்.

(சாமி. சிதம்பரனார், எட்டுத் தொகையும் தமிழர் பண்பாடும், ப. 80.) ஔவையார், வெள்ளிவீதியார் உள்ளிட்ட பத்துக்கும் மேற்பட்ட பெண்பால் புலவர்கள் பாடியுள்ள பாடல்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இவர்களுள் அள்;ர் நன்முல்லையார் (46) குமுழி ஞாழலார் நப்பசலையார் (160) முள்ளியூர்ப் பூதியார் (173) நக்கண்ணையார் (252) அஞ்சியத்தை மகள் நாகையார் (352) ஒக்கூர் மாசாத்தியார் (384) ஆகியோரின் பாடல்கள் மட்டும் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

## அள்ளூர் அன்னள்

பரத்தமை ஒழுக்கம் சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக இருந்த காலம் சங்க காலம். இற்பரத்தை, சேரிப் பரத்தை, காதல் பரத்தை, காமக் கிழத்தி என்று வரையறுக்கப்பட்டிருந்த மகளிர் வகைப்பாட்டினுள் நாள்தோறும் புதிய புதிய பரத்தையரை நாடி வதுவை அயர்ந்தவன் சங்கத் தலைவன்.